# அழகப்பா பல்கலைக்கழகம்

(தேசிய தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்று மதிப்பீட்டில; A+ (CGPA:3.64) தகுதி பெற்றது)

**காரைக்குடி – 630 003**

நாள்: 6.4.2019

அழகப்பா பல்கலைக்கழக நிறுவுநர் வள்ளல் அழகப்பரின் 110-வது பிறந்த நாள் விழா இன்று (6-4-2019) பல்கலைக்கழகத்தில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. காலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் துணைவேந்தர் தலைமையில் பல்கலைக்கழக அதிகாரிகள், ஆட்சிக்குழு உறுப்பினர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் சார்பில் வள்ளல் அழகப்பர் நினைவாலயத்தில் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.




அதன் தொடர்ச்சியாக,வள்ளல் அழகப்பர் பிறந்த நாள் விழா சிறப்பு சொற்பொழிவு நிகழ்ச்சி பல்கலைக்கழக லெ.சித.லெ. பழனியப்பச் செட்டியார் நினைவு கலையரங்கில் நடைபெற்றது. பல்கலைக்கழக துணைவேந்தர் பேரா. நா.இராஜேந்திரன் அவர்கள் இந்நிகழ்ச்சிக்கு தலைமையேற்று உரையாற்றினார். அவர் தமது உரையில் வள்ளல் அழகப்பருக்கு அவரது வாழ்க்கை எப்போதும் கனவாகவே இருந்தது என்றும், அந்த கனவுகள் அனைத்தையும் நனவாக்குவதிலேயே தமது வாழ்நாள் முழுவதையும் செலவிட்டவர் என்றும் குறிப்பிட்டார். அழகப்பா பல்கலைக்கழகத்தில் வள்ளல் அழகப்பர் அருங்காட்சியகம் நிறுவப்பட்டுள்ளது மேலும் **“வள்ளல் அழகப்பர் ஆதார மையம்”** (Resource Centre) ஒன்று விரைவில் நிறுவப்படவுள்ளது என்றும் குறிப்பிட்டு அந்த மையத்தில் வள்ளல் அழகப்பர் பற்றிய அரிய நூல்கள், அவரால் எழுதப்பட்ட கடிதங்கள் மற்றும் இதர ஆவணங்கள் ஆகியன சேகரிக்கப்பட்டு அந்த மையத்தில் இடம் பெற உள்ளது. இதன் மூலம் வள்ளல் அழகப்பரின் வாழ்க்கை வரலாறு மற்றும் அவரது தொண்டுகள் குறித்த முழுமையான விவரங்கள் வருங்கால சந்ததியினர் அறிந்து கொள்ள முடியும் என்றார்.

மேலும் அவர் பேசுகையில் காரைக்குடி நகரம் ஒரு கல்வி நகரமாக மாறியதற்கு வள்ளல் அழகப்பரே முக்கிய காரணம். நாட்டின் முக்கிய தலைவர்கள் அனைவரும் அவரால் காரைக்குடிக்கு வருகை புரிந்தது காரைக்குடி நகருக்கு பெருமை சேர்ப்பதாக இருந்தது. வள்ளல் அழகப்பர் எப்போதும் கல்வி நிறுவனங்களை உருவாக்குவதிலேயே கவனமாக செயல்பட்டார். கல்விக்காக அனைத்தையும் தானாக முன்வந்து வழங்கிய கொடை வள்ளல் அழகப்பர். இத்தகைய சிறப்பு மிக்க வள்ளலுக்கு அரசு முன்வந்து பாரத ரத்னா விருது வழங்கி சிறப்பு செய்தால் அவரது தொண்டிற்கு கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரமாக அமையும் என்றார். அழகப்பரின் கூர்மையான அறிவாற்றல் எல்லோராலும் வியந்து பாராட்டப்படுகிறது. அவரால் எழுதப்பட்ட கடிதங்களே இதற்கு சிறந்த சான்றாகும்.

இந்நிகழ்ச்சியில் வள்ளல் அழகப்பரின் பெயரன் முனைவர் வயிரவன் இராமநாதன் அவர்கள், நிறுவுநர் நாள் பேருரையாற்றினார். அவர் தமது உரையில், வள்ளல் அழகப்பரின் தன்னம்பிக்கையையும், ஆர்வத்தையும், விடாமுயற்சியையும், தான் எடுத்துக்கொண்ட செயலை திறம்பட முடிப்பதிலும் அவருக்கு இணை அவரே தான் என்றார். தனது கனவுகளை நனவாக்குவதில் எப்போதும் முனைப்புடன் செயல்பட்டு அதில் வெற்றியும் கண்டவர் அழகப்பர் எனத் தெரிவித்தார். தான் நோய்வாய்பட்டிருந்த போதிலும் சிறிதுகூட தளர்ச்சியடையாமல் காரைக்குடியில் கல்வி நிறுவனங்களை சிறப்பாக உருவாக்கினார் என்றும் தெரிவித்தார்.

பல்கலைக்கழக ஆசிரியர்கள் சார்பாக பேரா.த.ரா.குருமூர்த்தி, அலுவலர்கள் சார்பாக துணைப்பதிவாளர் எம்.பாலசுப்பிரமணியன் மற்றும் மாணவர்கள் சார்பாக திறன் மேம்பாட்டு மைய மாணவர் ராஜ சூர்யா ஆகியோர் பேசினர்.

இந்நிகழ்ச்சியில் அழகப்பரின் புதல்வி முனைவர் உமையாள் இராமநாதன், தேவி அலமேலு வயிரவன், காரைக்குடி நகர முக்கிய பிரமுகர்கள், பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர்கள், புல முதன்மையர்கள், முதல்வர்கள், பேராசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.

பதிவாளர் பேரா.ஹா.குருமல்லேஷ் பிரபு முன்னதாக அனைவரையும் வரவேற்றார். தேர்வாணையர் (பொ) கே.உதயசூரியன் நன்றி கூறினார். முனைவர் எஸ்.செந்தமிழ்ப்பாவை நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

பேரா.ஹா.குருமல்லேஷ் பிரபு
பதிவாளர்